[1992 பிப்ரவரி 5

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46, திருமதி கே. மரியம்உல் ஆசியா மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

46—

கருச்சிதைவு தடைச் சட்டம்.

*2383 திருமதி கே. மரியம்உல் ஆசியா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாயின் வயிற்றில் இருக்கும்போதே குழந்தை பெண்ணாக இருந்தால் கருச்சிதைவு செய்துகொள்ள பலர் முனைவதால் பெண் சிசு கொலையைத் தடுக்க சட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றத்தில் இதற்கான தடைச்சட்டம் அகில இந்திய அளவில் கொண்டுவரப்படவுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமையும்.

திருமதி கே. மரியம்உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக ஸ்கேன் எனப்படுகின்ற கருவியின் மூலம் எடுத்துப் பார்க்க வசதியில்லாதவர்கள் குழந்தை பிறந்ததும் பெண் குழந்தையாக இருந்தால் அந்தக் குழந்தைக்கு கள்ளிப்பால் மற்றும் நெல் மணிகளைக் கொடுத்து கொலைசெய்து விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும் அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** இப்படி (கள்ளிப்பால்) வைத்துக் கொன்று விடுகிறார்கள் என்று வருவது சரியல்ல. பொதுவாக இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று இருக்கலாம். ** அந்த சொற்றொடர்கள் நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை, சிசுவாக கருவில் இருக்கிற போதே அழிப்பதைத் தடுப்பதற்காகத்தான் இப்போது அந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று ஏற்கெனவே சட்டமன்றத்தில் ஒரு கருத்து வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து தடுப்பதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று தெரிவித்தார்கள். குழந்தை பிறந்த பின்னாலே அந்தக் குழந்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தையைக் கொன்று விடுகிறார்கள் என்று சொன்னால் அதற்கென்று உரிய சட்டங்கள், வழிமுறைகள் இருக்கின்றன. அதன் மூலம் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளை அரசாங்கம் நிச்சயமாக செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்ற முடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் ஸ்கேனை நிறுத்திவிட்டால், ஸ்கேன் மூலம் அந்தக் குழந்தை எப்படி வளருகிறது, என்ன பொசிஷனில் இருக்கிறது, அல்லது வரும் வாயிலில் நஞ்சு அடைத்துக்கொண்டிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, குழந்தையையும் காப்பாற்றும் வேலைகளை அவர்கள் அதன்மூலம் செய்கிறார்கள். மேலும், இன்னொன்றையும் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி யென்றால் இதற்கு சட்டத்தின் மூலம் தண்டனை கொடுத்தாலும், அந்தத்தண்டனையை டாக்டர்களுக்கும் கொடுப்பீர்களா, அல்லது பெற்றோர்களுக்குக் கொடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன். ஆப்பரேஷனை பெற்றோர்கள் ஒப்புதல்லுடன்தான் செய்கிறார்கள். ஆகவே, இதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் ஒரு விவரத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். ஸ்கேனை நிறுத்துவது என்ற எண்ணம் அரசாங்கத்திற்குக் கிடையாது. ஸ்கேன் என்பது வேறு, ஆம்னியோ சென்டசிஸ் என்பது வேறு. கருவிலே இருக்கின்ற குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிய செய்யப்படும் சோதனைக்குப் பெயர்தான் ''ஆம்னியோ சென்டசிஸ்''. எனவே, அந்த முறைதான் நிறுத்தப்படும் என்று அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. ''ஸ்கேன் என்பது, எக்ஸ்-ரே போன்ற ஒரு கருவியைப் பயன்படுத்தி, உள்ளே என்ன இருக்கிறது என்பதைப் படம் பிடிப்பதாகும். ஆகவே, ஆம்னியோ சென்டசிஸ் என்பது வேறு.

கர்ப்பப் பைக்குள் ஒரு ஊசியை செலுத்தி நீரை வெளியிலே எடுத்து, சோதனை செய்து அதன் மூலம் கருவிலே இருக்கின்ற சிசு ஆணா, பெண்ணா என்று அறிவதுதான் ''ஆம்னியோ சென்டசீஸ்'' என்ற முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆம்னியோ சென்டசீஸ் என்ற முறையைத்தான் மருத்துவர்கள் பயன்படுத்திவருகிறார்கள் என்று பரவலாக புகார்கள் வந்திருக்கின்றன. இந்த ஆம்னியோ சென்டசிஸ் சோதனை மூலம் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிந்த பின்பு, கருவைக் கலைத்து விடுகிறார்கள். எனவே, ஸ்கேனை நிறுத்தினால் மருத்துவர்கள் உள்ளே இருக்கிற கோளாறுகளை

எப்படி அறிவார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. ஸ்கேனை. நிறுத்துகிற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 47, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

47—

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் சார்பில் தொழில்நுட்பக் கல்லூரி திறத்தல்.

*3343—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேரன்மகாதேவி தொகுதி கோபாலசமுத்திரத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தொழில் நுட்பக் கல்லூரி (Polytechnic) தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10–00

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பாலிடெக்னிக் ஒன்று அமைக்க முந்தைய சட்டமன்ற உறுப்பினர் பெரிதும் முயற்சி எடுத்து அதற்கான இடங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோதிலும் பின்னர் அது திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்டதாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அறிந்தேன். அதனால்தான் இதை வினாவாக சட்டமன்றத்திற்கு அனுப்பினேன். சேரன் மகாதேவி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் அதில் கிடைத்த வெற்றி, எனக்குக் கிடைத்த வெற்றியல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவிக்குக் கிடைத்த வெற்றி. ஆகவே